**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.205/2022**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 26.03.2026 | | |
| பெயர்: | வேம்பு<br>(PW–1 Chief ) | கணவர் பெயர்: | குமார் |
| கிராமம்: | சின்னகொப்பியம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 38/2026 |

**முதல் விசாரணை : 26.03.2026**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடந்த 05.08.1974 தேதியிட்ட எனது தந்தை ராஜகோபால் பெயரிலான கிரய சாசனம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்,

2. கடந்த 27.08.2002 தேதியிட்ட எனது தந்தை ராஜகோபால் பெயரிலான பட்டா கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்,

3. கடந்த 29.08.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்,

4. கடந்த 01.09.2022 தேதியிட்ட 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.4** ஆகவும்,

5. கடந்த 01.09.2022 தேதியிட்ட 4ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.5** ஆகவும்,

6. கடந்த 01.09.2022 தேதியிட்ட 5ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.6** ஆகவும்,

7. கடந்த 01.09.2022 தேதியிட்ட 6ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.7** ஆகவும்,

8. கடந்த 09.09.2022 தேதியிட்ட 6ம் பிரதிவாதியால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.8** ஆகவும்,

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.